# தந்தி

இல: 1126 1970 செப்டம்பர் 4 வெள்ளிக்கிழமை ★ விலை சதம் 5


University of Jaffna Sri Lanka RECEIVED 1991 7 - 8 Periodicals Division Library

## பங்கீட்டு அரிசி

# ஒரு கொத்து இனம் மறு கொத்து 75 சதம்

**பொது மக்களுக்கு, கூப்பனுக்கு வழங்கப்படும் பங்கீட்டு அரிசி இரண்டு கொத்தாக வழங்கப்படும். ஆனால், ஒரு கொத்து இலவசமாக வழங்கப்படும் அதே நேரத்தில், மறு கொத்துக்கு எழுபத்தைந்து சதம் வசூலிக்கப்படும்.**

பண்டாரநாயகா ஞாபகார்த்த தினமான செப்டம்பர் 26-ந் திகதியிலிருந்து வழங்கப்பட இருக்கும் முதல் கொத்து அரிசியை இலவசமாகவும், இரண்டாவது கொத்து அரிசியை 75 சதமாகவும் கொடுக்க அமைச்சரவை நேற்று முடிவு செய்தது.

உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யும் நெல்லின் தொகையை அதிகரிக்கவும் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

காணி, விவசாய அமைச்சர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவ இதற்கான புதிய திட்டத்தை அமைச்சரவையின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பித்தார்.

புதிய திட்டத்தின்படி புசல் ஒன்றின் உத்தரவாத விலையான ரூ.14 உற்பத்தியாளருக்கே நேரில் கிடைக்கும். இடையிலுள்ளோர் பயனடைய முடியாது.

ஆலையில் குற்றப்பட்ட அரிசியின் தரத்தை உயர்த்தி, இந்த அரிசியைக் கூப்பனுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவை நியமனங்களைத் துரிதப்படுத்துவதற்கான திட்டத்துக்கும் அமைச்சரவை அங்கீகாரம் அளித்தது. இத்திட்டத்தை உள்நாட்டு, உள்ளூராட்சி, பொது நிர்வாக அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா சமர்ப்பித்திருந்தார்.

இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சை முறையில் ஏற்படுத்த இருக்கும் மாற்றங்களுக்கும் அமைச்சரவை அங்கீகாரம் அளித்தது.

பொதுத்துறை ஸ்தாபனங்கள் யாவும் அரசாங்க நிதி ஆண்டையே கடைப்பிடிக்க வேண்டும் என்ற நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவின் திட்டமும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

உணவுப் பொருட்களைத் தேக்கி வைக்கப் போதிய இடவசதி ஏற்படுத்தும் திட்டம் ஒன்றை வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு ரி. பி. இலங்கரத்தின சமர்ப்பித்தார். அமைச்சரவை இதற்கும் அங்கீகாரம் அளித்தது. (க)



பாடசாலை ஆசிரியையாகப் பணி புரிந்து வரும் லலிதா நிரஞ்சனா அல்மெய்டா, சிங்கள நாடகங்கள் பலவற்றில் நடித்துப் பெரும்புகழ் தேடிக் கொண்டுள்ளார். தற்போது சிங்களத் திரைப்படங்களிலும் நடிக்கத் தொடங்கியுள்ள இவர், முன்னணி ஸ்தானம் வகிக்கிறார். (க).

### மீளுட்சி



என்னுங்க, சோல்பரிப் பிரபு இங்கிருக்கும் போது உபயோகித்த ஹம்பர் கார் இப்போது கசிப்பு ஏற்றித் திரியுதாமே!

ஆமாங்க, இருக்கிற இடத்திலே இருந்தால் தானே எதற்கும் மதிப்புண்டு; அந்தஸ்து இழந்தால் இப்படித்தான்!

## டி. எஸ். தபால் முத்திரை அழிக்கப்பட மாட்டாது

ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் வெற்றியைக் குறிக்கும் பத்துச் சத முத்திரை ஒன்றை தபால், தந்தி திணைக்களம் வெளியிட உள்ளது.

முன்னாள் பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயகாவின் தலை பொறிக்கப்பட்ட 10 சதம் தபால் முத்திரைகள் அழிக்கப்பட இருப்பதாக மாலைத் தினசரி ஒன்றில் வெளியான செய்தி தவறு என தபால் அமைச்சு அறிவித்தது.

எல்லா முத்திரைகளும் உபயோகிக்கப்படும் என்றும் எந்த முத்திரையும் அழிக்கப்பட மாட்டா என்றும் தபால் அமைச்சு அறிவித்தது. (க)

## பிரதமர் எச்சரிக்கை

"நாட்டில் தீய சக்திகள் ஜனநாயகத்துக்கு மாறான வழியில் தலைதூக்க முயல்கின்றன. இதை எதிர்த்துப் போராடத் தயாராய் இருங்கள்."

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகா லுஸாக்காவுக்குப் புறப்படுமுன் தேச மக்களுக்கு விடுத்த செய்தியில் இவ்வாறு எச்சரித்திருக்கிறார். (க).

## 'லேக் ஹவுஸ்' விசாரணைக்கு அதிகாரம் வழங்கப்பட்டது

"லேக் ஹவுஸ்" பத்திரிகை ஸ்தாபனம் மீதான குற்றச்சாட்டு பற்றி விசாரணை நடத்தும் குழுவுக்கு இலங்கை கல்வி அதிகாரி, இறைவரி திணைக்கள அதிகாரி ஆகியோரிடம் அந்த ஸ்தாபனத்துடனை கணக்கு வழக்குகளை விசாரித்துப் பரிசீலனை செய்யும் அதிகாரம் கவர்னர் ஜெனரலினால் வழங்கப்பட்டுள்ளது.

குழுத் தலைவர் திரு. டி. எஸ். பெர்னாண்டோவின் வேண்டுகோளைத் தொடர்ந்து இந்த அதிகாரம் வழங்கப்பட்டது. (க)

## ஒத்திவைப்பு

நிந்தவூர் தேர்தல் வழக்கிற்கு எதிரான ஆட்சேப மனு விசாரணை நேற்று முடிவுற்றது.

உயர் நீதிமன்றத் தேர்தல் நீதியரசர் திரு. ஜீ. ஜீ. வீரமந்திரி தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவனுடன் போக மனைவி மறுப்பு:

# ஆசைநாயகி ஒருத்தி அவருக்கு இருக்கிறாள்

### குழந்தைகள் மூவருக்கு தாபரிப்புபணம்கட்டஉத்தரவு

"இந்த மனுதாரரைத்தான் நான் கல்யாணம் செய்தேன். அவளைத் தவிர வேறெந்தப் பெண்ணுடைய அன்பையும் நான் பெறவில்லை. எனக்கு ஓர் ஆசைநாயகி இருப்பதாக என்ன காரணத்துக்காக என் மனைவி குற்றம் சாட்டுகிறாரோ தெரியவில்லை."

கண்டி மாஜிஸ்திரேட் திரு. எப். பி. ஜீ. பெர்னாண்டோ முன்னிலையில் விசாரணைக்கு வந்த தாபரிப்பு வழக்கு ஒன்றில் அந்த வழக்கின் எதிர் மனுதாரர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த வழக்கில் பி. அலிஸ் என்பவர் மனுதாரர். கே. சோமரத்தின என்பவர் எதிர் மனுதாரர்.

இவர்கள் கல்யாணமானவர்கள். இப்போது தன்னைக் கைவிட்டுள்ள தன் கணவரிடம் இருந்து தனக்கும், அவரால் தமக்குப் பிறந்த மூன்று பிள்ளைகளுக்கும் தாபரிப்புக் கோரி மனுதாரர் எதிர் மனுதாரர் மீது இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

வழக்கு விசாரணையின் போது மனுதாரும் எதிர் மனுதாரும் வழக்கறிஞர்களின் உதவியின்றித் தாமே நேரில் ஆஜராகி வழக்கை நடத்தினார்.

மனுதாரர் தனது மனைவி என்பதையும், மூன்று குழந்தைகளினதும் தந்தை தான் என ஒப்புக்கொள்வதாகவும் மாஜிஸ்திரேட் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளித்த எதிர் மனுதாரர் தெரிவித்தார்.

மாஜிஸ்திரேட்: (எதிர் மனுதாரரைப் பார்த்து) நீர் மனைவியையும் குழந்தைகளையும் கவனியாது கைவிட்டுள்ளதாகச் சொல்வது ஏன்?

எதிர் மனுதாரர்: நான் அவரையும் குழந்தைகளையும் ஏற்றுக்கொள்ள விரும்புகிறேன்.

மாஜிஸ்திரேட்: உமது கணவர் உம்மை அழைக்கிறார். நீர் என்ன சொல்கிறீர்? அவருடன் போக விருப்பமா?

மனுதாரர்: நான் விரும்பவில்லை. அவருக்கு ஓர் ஆசைநாயகி இருக்கிறாள்.

மூன்று குழந்தைகளுக்கும் மாதம் ரூபா 45 வீதம் தற்காலிக தாபரிப்புப் பணம் செலுத்தும்படி எதிர் மனுதாருக்கு உத்தரவிட்ட மாஜிஸ்திரேட், மனுதாருக்கு தாபரிப்பு நியமிப்பது சம்பந்தமான விசாரணையை அக்டோபர் 13-ம் தேதி வரை ஒத்திவைத்தார். (ஐ)

### ஆறும் தேதி வரவேற்பு

மன்னார், செப். 3

நியமன எம். பி. யான திரு. ஜே. ஈ. ஜோன் ஜெட்ரிகோ அவர்களுக்கு மன்னார் மாவட்ட பரதகுல மக்களால் இம்மாதம் ஆறும் தேதியன்று அமோக வரவேற்பு அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (185)

### லுஸாக்கா நிகழ்ச்சிகள் இங்கு - வானொலியில் கேட்கலாம்

லுஸாக்காவில் நடைபெறும் கூட்டுச்சேரா நாடுகளின் மகாநாட்டு நிகழ்ச்சிகளைத் தொகுத்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மூலம் ஒலிபரப்புவதற்கு அரசாங்கம் ஒழுங்கு செய்து வருகிறது.

மகாநாடு நடைபெறும் காலத்தில் தினமும் அரை மணி நேரம் நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தொகுத்து அளிக்கும்.

கூட்டுச்சேரா நாடுகளின் மகாநாடு ஸாம்பியாவின் தலைநகரான லுஸாக்காவில் எதிர்வரும் 8-ம், 9-ம், 10-ம் திகதிகளில் நடைபெற இருப்பது தெரிந்ததே.

இம் மகாநாட்டில் கலந்து கொள்வதற்கு பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான தூதுகோஷ்டி இன்று லுஸாக்காவுக்குப் புறப்பட்டுச் செல்கிறது. பிரதமர் செப்டம்பர் 19-ம் தேதி அங்கிருந்து புறப்பட்டு இலங்கை வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

### கிருமிநாசினிபருகி இளம் பெண் பலி

பத்தொன்பது வயதுப் பருவ மங்கையான அனுசூயா கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார். இப் பரிதாப சம்பவம் பருத்தித்துறையைச் சேர்ந்த தும்பளை என்ற இடத்தில் நடைபெற்றுள்ளது.

மரண விசாரணை நடாத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கினார். (ஐ-7)

### இரதோற்சவம்

நீர்கொழும்பு ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான் ஆவணி சதுர்த்தி இரதோற்சவ விழா இன்று நடைபெறுகிறது.

காலையில் இடம்பெறும் அஷ்டோத்தர சத சங்காபிஷேகமும் நண்பகல் விசேட பூசை என்பவற்றைத் தொடர்ந்து மாலை விநாயகப்பெருமான் சித்திர இரதத்தில் பெருமான் சித்திர இரதத்தில் ஆரோகணித்து நகர் வலம் வருவார். (ஐ)

### பதிநாலு வயதுச் சிறுமியை கற்பழித்ததாக வழக்கு

"நான் ஜினதாசா வீட்டில் இருந்த பொழுது அங்கு அழுது கொண்டு வந்த சுவர்ணலதா எதிர் மனுதாரர் அவரின் மனைவி இல்லாத போது தன்னைக் கற்பழித்து விட்டதாக முறைப்பட்டாள்."

கல்தோட்ட கற்பழிப்பு வழக்கு இரத்தினபுரி நீதவான் திரு. சிற்லால் பெரேரா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது சாட்சியமளித்த ஏ. டி. மாவிஸ் சிறீவர்த்தன (28 வயது) மேற்கண்டவாறு கூறினார்.

இந்த வழக்கில் கல்தோட்டை என்ற இடத்தில் வைத்து கடந்த வருடம் ஆகஸ்ட் 6-ம் திகதி 14 வயதுச் சிறுமி சுவர்ணலதா விக்கிரமரத்தினவைக் கற்பழித்ததாக பலாங்கொடையைச் சேர்ந்த ஏ. கிரேரோ என்பவர் மீது பலாங்கொடை பொலீசார் குற்றஞ்சாட்டி இருந்தனர்.

ஏ. டி. மாவிஸ் சிறீவர்த்தன தொடர்ந்து சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:—

"சுவர்ணலதா தான் இனியும் நேரே வீட்டில் வாழும் நிலையில் இல்லை என்று என்னிடம் கூறினார்.

"என்னுடைய கணவர் கல்தோட்டை குடியேற்றத் திட்டத்தில் வாழ்ந்து வருகிறார். ஜினதாசாவின் வீடும், எதிர்மனுதாரரின் வீடும் ஏறக்குறைய எனது வீட்டிற்கு அருகாமையிலேயே அமைந்திருக்கின்றன. சுவர்ணலதாவை நான் கடந்த ஒரு வருடகாலமாக அறிவேன். எதிர்மனுதாரரின் குழந்தைகளை சுவர்ணலதா பராமரித்து வந்தார்.

"சுவர்ணலதா எனது வீட்டிற்கு வருவது வழக்கம். சில சமயங்களில் வாரத்திற்கு 2 தடவைகளும் வருவாரர். எதிர்மனுதாரர் வீட்டில் வைத்து அவர் தன் மீது பலாத்காரம் பிரயோகிப்பதாக சுவர்ணலதா என்னிடம் எப்போதாவது கூறியதும் கிடையாது. அவரின் அழுகுரலை நான் கேட்டதும் கிடையாது.

"ஆகஸ்ட் மாதம் 15-ம் திகதி காலை 10 மணியளவில் நான் ஜினதாசா வீட்டில் இருந்த போது ஜினதாசாவின் மனைவியும் அங்கிருந்தார். அங்கே வந்த சுவர்ணலதா கதறியபடி தனக்கு நடந்தவற்றை எல்லாம் விபரமாகக் கூறினார்.

"நடந்த சம்பவத்தை கிராம சேவையாளருக்கு சொல்லும்படி பியதாச என்பவரை ஜினதாசா அனுப்பினார். சிறிது நேரத்தின் பின் அங்கு வந்த கிராம சேவையாளர் சுவர்ணலதாவை பொலீஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றார்.

அடுத்து டீ. எம். பியதாசா சாட்சியமளிக்கையில், "ஜினதாசா சொன்ன செய்தியை கிராம சேவகரிடம் சென்று கூறினேன். அதன் பின் கிராம சேவையாளர் என்னுடன் ஜினதாசா வீட்டிற்கு வந்தார்" என்று சொன்னார்.

எதிர்மனுதாரர் திரு. உபாலி ராஜபக்ஸவின் அனுசரணையுடன் ஆஜரானார்.

மேலதிக விசாரணைகள் செப்டம்பர் மாதம் 30-ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டன. (ஐ-3)

### கொலை சம்பவங்கள் அதிகரிப்பு

கொழும்பு, செப். 4

நாட்டில் நடைபெறும் கொலை சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரிப்பதாக கவலை தெரிவித்துள்ளது கொழும்பு பொலீஸ் தலைமைக் காரியாலயம்.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் மொத்தம் 84 கொலைகள் நடைபெற்றுள்ளதாகவும், ஆனால் கடந்த வருடம் இதே மாதத்தில் ஆக 53 கொலைகள் மட்டுமே நடைபெற்றதாகவும் கூறப்படுகிறது.

பொலீஸ் தலைமைக் காரியாலய மதிப்பீட்டின் படிக்கு கடந்த ஆகஸ்ட் மாத இறுதிவரை நாட்டில் இவ்வருடம் மொத்தம் 586 கொலை சம்பவங்கள் நடைபெற்றுஉள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ல-7)

### ஆனைக்கோட்டை கொலையில் எதிரிக்கு ஆறு வருடச் சிறை

யாழ்ப்பாணம், செப். 3

ஆனைக்கோட்டை கொலைவழக்கு விசாரணையில் எதிரிக்கு இன்று ஆறு வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

யாழ். அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. ஓ. எல். டி. கிரெட்ஸர் முன்னிலையில் இன்று இந்த வழக்கு விசாரிக்கப்பட்டது.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நாகமணி கந்தையா என்பவரை வெட்டிக் கொலை செய்ததாக கந்தையா பொன்னுசாமி என்பவர் மீது பொலீசார் இந்த வழக்கைத் தாக்கல் செய்து இருந்தனர்.

நீதியரசர் திரு. ஓ. எல். டி. கிரெட்சர் எதிரிக்கு 6 வருடக் கடுங்காவல் தண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறினார். (ஐ-220)

### யார் கண்டார்?

உள்ளூர் "சேகுவேரா" கிளர்ச்சிக்காரர்களைப் பொலீஸார் விசாரணை செய்தார்கள். விசாரணையின் பலனாக அவர்களுக்குக் கிடைத்ததெல்லாம் முரண்பட்ட, தவறான தகவல்களாம். விசேஷ ஸி. ஐ. டி. பொலீஸின் விசாரணைக்குக் கிடைத்த இந்த ஏமாற்றத்தால், சேகுவேரா இயக்கம் பற்றிய முன்னைய முடிவுகளை எல்லாம் மாற்றிக்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலையும் வந்ததாம். என்ன ஆச்சரியம்! இந்தத் தவறான வழியில் ஏமாற்றம் அடைந்திருக்கையில் சற்றே விடிவெள்ளி உதயமாகியதாம். அதாவது சேகுவேரா அடியை அப்படியே அறியக் கூடிய தகவல்கள் கிடைத்தனவாம். விரைவில் சேகுவேரா அடிமுடி காணும் படலம் முடிந்துவிடும் என்றும் விசேஷ பொலீஸார் நம்பிக்கை கொண்டுள்ளனர். அப்பாடா! தங்களை அறிந்து கொள்ளட்டும் என்றுதான் சேகுவேரா இயக்கத்தினர் தவறான செய்திகளையும், முரண்பட்ட வாக்குமூலங்களையும் பொலீஸுக்குக் கொடுத்தார்களோ, யார்கண்டார்!

தந்தி

தந்தி
சிறு விளம்பரங்கள்

திரேக வளர்ச்சி

உயரமாகவும், கொழுத்தவராகவும் சர்வ உடலமைப்பை விருத்தி செய்து சதை வளர்ந்து கம்பீரமாய் தோற்றமளிக்க உயரத்தையும், பாரத்தையும், வயதையும் குறித்து இலவச விபரங்களுக்கு எழுதுங்கள். மிஸ்டர் இந்தியா பொடி பில்டிங் நிலையம், வல்கம்முல்லை, வியாங்கொடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவனைப் பார்த்தால் அவளுக்கு பிசாசு ஞாபகம்

# மணமாகி 2-ம் வாரம் கணவனை விட்டு ஓட்டமாம்

## கோர்ட்டில் மனுதார் அளித்த சாட்சியம்

"எனது மனைவி திருமணமான இரண்டாம் வாரத்தில் என்னைக் கைவிட்டுச் சென்றார்- என் மூலமே அவர் கர்ப்ப முற்றார்-"

கண்டி மாவட்ட பதில் நீதிபதி திரு. ஜி. முதநாயக்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட விவாக ரத்து வழக்கு ஒன்றில் மனுதார் ஒருவர் மேற்கண்டவாறு சொன்னார்.

இந்த வழக்கில் பேராதனைப் பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் கடமை ஆற்றும் ஆர். எம்- ரம்பண்டா மனுதாரர்.

தென்னக்கும்புரவைச் சேர்ந்த தனது மனைவியான சிலாவதியிடம் இருந்து விவாகரத்துக் கோரி இந்த வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

மனுதாரரான ரம்பண்டா சாட்சியம் அளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது:-

"எங்கள் திருமணம் பெற்றோரால் ஒழுங்கு செய்யப்பட்ட திருமணம் ஆகும். திருமணத்துக்கு முன்னர் ஒருவரை ஒருவர் கண்டது கிடையாது.

"திருமணத்தை முன்னிட்டு மோதிரம் ஒன்றும் 400 ரூபாவும் எனக்குத் தரப்பட்டது.

"திருமணம் நடைபெற்ற போது நான் வேலையில் இருந்தேன். சொத்து எதுவும் அப்பொழுது எனக்கு இருந்ததில்லை. எனது தாயாரின் வீட்டில் வசித்து வந்தேன்.

"திருமணமானவுடன் மனைவியை தாயாரின் வீட்டுக்கு அழைத்துச் சென்றேன். அப்பொழுது அந்த வீட்டில் வேறு எவரும் குடி இருக்கவில்லை. இருவரும் தனியாகவே குடித்தனம் நடத்தினோம். எனது சின்னம்மாவும் நான்கு பிள்ளைகளும் அந்த வீட்டில் வசித்ததாகக் கூறப்பட்டதில் உண்மை கிடையாது. சின்னம்மா வீட்டில் பெரிய ஆதிக்கம் செலுத்தி வந்தார் என்று கூறப்படுவதிலும் உண்மை கிடையாது.

"என்னைப் பார்க்கும்போது பிசாசைப் பார்த்தது போல இருப்பதாக மனைவி என்னிடம் சொன்னார். சின்னம்மாவரால் தனக்குக் கஷ்டம் ஏற்பட்டிருப்பதாக அவர் என்னிடம் ஒரு போதும் சொன்னது கிடையாது. இதன் பின்னர் அவர் என்னை விட்டுச் சென்றுவிட்டார்."

இவ்வாறு மனுதார் தனது சாட்சியத்தில் கூறினார்.

நீதிபதி மேல் விசாரணையை மற்றொரு தினத்துக்கு ஒத்திவைத்தார். (ஐ-5)

## ஆண், பெண் உறவு நாவலின் பிரசுரிப்பாளருக்கு வழக்கு

மெல்போர்ன், செப். 3

தடை விதிக்கப்பட்ட "போர்ட்நோய்ஸ் கொம்பிளேயின்ட்" என்ற ஆண், பெண் உறவு பற்றிய அமெரிக்க நாவலின் பிரசுரிப்பாளர்களான பென்குயின் புக்ஸ் ஆஸ்திரேலியா லிமிட்டட் ஸ்தாபனத்துக்கு எதிராக விக்டோரியன் பொலீஸார் நேற்று முன்தினம் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த நாவலின் 75 ஆயிரம் பிரதிகளை பென்குயின் அச்சிட்டது. இந்த நாவலை இறக்குமதி செய்யக்கூடாது என்று உள்நாட்டுச் சுங்கப்பகுதி தடை விதித்ததை அடுத்தே உள்நாட்டில் இதன் பிரதிகள் அச்சிடப்பட்டு உள்ளன.

திங்கட்கிழமை இவை கடைகளில் வைக்கப்பட்டது முதல் மிகவும் துரிதமாக விற்பனையாகின.

இதைத் தொடர்ந்து விக்டோரியன் திகர் பரிசோதனை குழுவும் பறியும் பொலீஸார் நேற்று ரிங்வுட்டில் இருக்கும் பென்குயின் பிரசுரிப்பாளர் தலைமைக் காரியாலயத்தில் மூன்று சம்மன்ஸ்கள் வழங்கினர்-

இது பற்றிய வழக்கு விசாரணை இம் மாதம் 14- ம் தேதி போர்ன்வுட் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நடைபெற இருக்கிறது.

இந்த நாவலை வயது வந்தவர்களுக்கு விற்பனை செய்வதென்று தெற்கு ஆஸ்திரேலியா செய்துள்ள முடிவுக்கு எதிராக சமஷ்டி அரசாங்கம் நடவடிக்கை எடுக்காது என்று கன்பெராவில் சுங்கப் பகுதி அமைச்சர் திரு. டொனல்ட் சிப் கூறினார். (ஐ)

## இரண்டு தலைகளுடன் பிறந்த மற்றொரு விசித்திர குழந்தை

இரண்டு தலைகளும், மூன்று கைகளும் கொண்ட ஆண் குழந்தை ஒன்று தாரியமரடிற்ற கிராம ஆஸ்பத்திரியில் பிறந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இரு தலைகள் கொண்ட குழந்தையொன்று நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் பிறந்தது தெரிந்ததே. இது நடந்து இரண்டு தினங்களுக்குப் பின்னரே மேற்படி குழந்தை பிறந்துள்ளது.

இக் குழந்தையின் தாய் தற்போது ஆஸ்பத்திரியில் இருப்பதாகவும், உடல் நிலை ஆரோக்கியமாகவுள்ளதாகவும் தெரிகிறது.

பதினொன்றரை இறாத்தல் நிறை கொண்ட இக் குழந்தை பிறந்த சில நிமிடங்களுள் இறந்து விட்டது.

இந்த விசித்திர குழந்தைக்கு ஒரு கழுத்துத்தான். அக் கழுத்திலிருந்து மரக்கிளைகளைப் போல் இரு தலைகள் அமைந்துள்ளன. ஆனால் இரு தலைகளும் வழக்கமான குழந்தைகளின் தலையைப் போலவே அமைந்துள்ளதாம்-

மூன்று கைகளுள் இரண்டு வழமையான கைகளைப் போல் அமைந்துள்ளன. மூன்றுவது கை கழுத்தின் பின் புறத்தில் கழுத்தின் கீழ் அமைந்துள்ளது. இக் கையின் விரல்களும் வழமைக்கு மாறாக அமைந்துள்ளன. (ஐ-7)

## கீழே விழுந்து கிடந்தவர்மீது அடுத்தடுத்துக் கத்திக் குத்து

மகாதுன்னுக்கும் எதிரிக்கும் இடையில் சற்று நேரம் காரசாரமான வாக்குவாதம் நடைபெற்றது. எதிரி மகாதுன்னை கத்தியால் குத்தினார். கத்திக் குத்து வாங்கிய மகாதுன் கீழே விழுந்தார்- அதன் பின்னரும் எதிரி அவரைப் பலமுறை கத்தியால் குத்தினார்.

காலி மேலதிக நீதவான் திரு. லக்ஷ்மன் வீரசேகரா முன்னையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட கொலை வழக்கொன்றில் சாட்சியமளித்த ஏ. ராஜகருணா என்பவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த ஜூலை மாதம் 5-ம் திகதி றத்ஹம, கட்டுதொம்பே என்ற இடத்தைச் சேர்ந்த மகாதுன் என்றழைக்கப்படும் தே- அமரசிறீ என்பவரைக் கொலை செய்ததாக ஹேரத் பௌவிரட்ண என்பவர் மீது இவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சாட்சி மேலும் கூறியதாவது:

"எனக்கு எதிரியை நன்கு தெரியும். மகாதுனும் எதிரியும் நல்ல நண்பர்கள். அவர்கள் ஒருவர் வீட்டிற்கு மற்றவர் விஜயம் செய்வது வழக்கம் - மகாதுனுக்கு மூன்று சகோதரிகள் உளர். அப்பெண்களுக்கும் எதிரிக்குமிடையே தொடர்புகள் உண்டோ, இல்லையோ என்பது பற்றி எனக்குத் தெரியாது.

"சம்பவம் நடந்த தினத்தன்று காலை மகாதுனும் எதிரியும் பேசிக் கொண்டிருந்தனர். பின்னர் மாலையிலும் அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டேன். அப்போது அவர்களிடையே இடம்பெற்ற வாக்குவாதம் வலுவடைந்தது- அதைத் தொடர்ந்து எதிரி மகாதுனைக் கத்தியால் குத்தினார். கீழே விழுந்த மகாதுனை ந் [illegible]ரும்பவும் கத்தியால் குத்தினா[illegible]" (ஐ-7)

## நஞ்சருந்திய இளைஞன் மரணம்

நிந்தவூர், செப்- 3

காரைதீவு, 3-ம் குறிச்சியைச் சேர்ந்த பரமலிங்கம் அருளானந்தன் எனும் 16 வயது இளம் வாலிபர் நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்- (217)

## பெற்ற சிசுவை கொன்றாராம் பெண்ணைப் பொலீஸ் கைது

தனது குழந்தையை கொலை செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் 19 வயதுடைய முஸ்லிம் பெண் ஒருத்தியை பொலீஸார் கைது செய்தனர்.

இது பற்றி புறக்கோட்டை பொலீஸார் தெரிவித்ததாவது:-

"மீரானியா தெருவில் வசிக்கும் இந்த இளம் பெண் கடந்த செவ்வாய்க்கிழமை ஒரு குழந்தையைப் பிரசவித்தாள்- கழுத்து நெரிக்கப்பட்டு கொலையுண்ட குழந்தையின் உடல் பேரை ஆற்றுக்குப் பக்கத்தில் சாக்கினால் சுற்றப்பட்டுக் கிடந்தது. இதை பொலீஸார் கண்டு பிடித்தனர்."

நகர மரண விசாரணை அதிகாரி திரு- எகர்ட்டன் பி- வீரக்கோன் முன்னிலையில் மரண விசாரணை நடைபெற்ற போது, "கழுத்து நெரிக்கப்பட்டதனால் ஏற்பட்ட மரணம்" என மருத்துவ சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டது-

பொலீஸார் தற்போது தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-3)

## வீடெரிந்து சாம்பலானது

முஸ்தபாபுரம், செப்- 3

நிந்தவூர், முஸ்தபாபுரம் (5-ம் குறிச்சி) குடியேற்றப் பகுதியைச் சேர்ந்த ஜனாப் யூ- அலியார் [illegible]னும் தொழிலாளியின் வீடு [illegible]ப்பற்றி எரிந்து சாம்பலாகியுள்ளது (217)


## ஜீ. சீ. ஈ. ஆசிரியர் நியமனம்

18—45 வயதிற்குட்பட்ட இரண்டு திறமைகள் உள்ள ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்- குறிப்பிட்ட விண்ணப்பப் பத்திரங்களும் விபரங்களும் இலவசமாய் கிடைக்கும்.

முடிவு திகதி 18-9-70

மு. குறிப்பு: நேர்மையான மக்கள் சேவை-

CENTRAL SUPPLIERS,
No- 10, De Silva Road,
KALUBOWILA, DEHIWALA-



எங்களிடம் நிவர்த்தி பெற்றவர்கள்

## இன்புற்று வாழ்கிறார்கள் . . .

உங்கள் பிரச்சினை எதுவானாலும் சரி, உங்கள் வாழ்க்கை மறுமலர்ச்சியடைந்து, வியாபாரத்தில் லாபம் பெற்று தொழிலில் உயர்வடைந்து வாழ்க்கையில் வெற்றியடைந்து குடும்பத்தின் தொல்லை நீங்கி வாழ்நாள் எல்லாம் இன்புற்று வாழ தினமும் காலையிலும், மாலையிலும் உங்கள் வீட்டிலோ கடையிலோ,

## ஸ்ரீ ராம் வாசனைப் புகையை

தவறாது பாவித்து பலன் அடையுங்கள்.
ஒரு மாத பாவனைக்கு ரூ. 3-25
மூன்று மாத பாவனைக்கு ரூ. 7-50
வி- பி- பி- ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

★ கெட்ட கனவுகளினால் இந்திரியம் வெளியாகுதல் ★ காதலையிட்டு பிரச்சினையா? ★ பரீட்சையில் சித்தியா? வழக்குவெல்லவா? ★ மேலும் வியாபாரம் முன்னேற்றம்பெற ★ குடும்பத்தில் உள்ள பிணக்குகள் தீர ★ எதிரிகளை பணியச் செய்து தண்டனை பெறச்செய்ய ★ பெரியோர்களின் மனதை தன்வசப் படுத்த ★ தொழில் பிரச்சினை தீர. இதை விட வேண்டியதோர் வேலையில் வெற்றிபெற.

7 நாட்களில் பலன் பெற்றுக்கொள்ளலாம்.

காதலில் வெற்றி, பெற்றோரின் விருப்பம், நிச்சயமாக பெற்றுக் கொடுக்கப்படும். இருவர் பெயர்களுடன் இலவச விபரங்கட்கு எழுதுங்கள்.

அரசாங்க அனுமதிபெற்ற மகா மாந்திரீகர்

நீலன் கந்தசாமி,

லக்ஸல கட்டிடம், நிட்டம்புவ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார் ஒன்று வீதியில் அங்கும் இங்கும் ஓடியது

## பந்துல பெரேரா கொலை வழக்கில் சாட்சியம்

"நான் தர்மபால மாவத்தையைக் கடந்த போது, அவ் வீதி வழியே கார் ஒன்று அலங் கோலமாக அங்கும் இங் கும் வந்து கொண்டிருந் தது. இக் கார் என்னை முட்டி மோதி விடுமோ என்ற பயத்தில் நான் ரோட்டில் நடைபாதை யில் ஏறி நின்றேன்."

நேற்று இடம்பெற்ற பந்துல பெரேரா கொலை வழக்கு விசாரணையில் முதலாவது எதிரியின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஈ. சிட்டி குறுக்கு விசாரணை செய்தபோது டொன் சோம ரெட்ண தோமஸ் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

துங்கவேலு என்றழைக்கப் படும் சுப்பையா முத்தையா, ஆறுமுகம் சுப்பிரமணியம் ஆகிய இரு வர் மீதும் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சாட்சி மேலும் கூறியதாவது:—

"இக் கார் "பார்க் வீதி"யில் திரும்பிய பின்னரே, அப்பாதை வழியாக கார் ஒன்று கொள்ளுப் பிட்டியை நோக்கிச் சென்றதைக் கண்டேன். உடனே நான் ரோட் டைக் கடந்து சம்பந்தப்பட்ட கார் சென்ற பாதையில் சென் றேன்.

"அப்போது காரிலிருந்து ஒரு வர் இறங்கி நான் நின்ற பக்கத்தை நோக்கி ஓடி வந்தார். அந்த நபர் என்னை நெருங்கியதும் நான் அவரி டம் "என்ன நடந்தது என விசா ரித்தேன்?"

"அந்த நபர் பதிலெதுவும் கூறு மல் தொடர்ந்து ஓடிக் கொண்டி ருந்தார். அந்நபர் என்னை நெருங் கிய வேளையில் தனது ஓட்டத்தைச் சிறிது குறைத்திருந்தார்.

"தொடர்ந்து ஓடிக் கொண்டி ருந்த இந்நபர் தர்மபால மாவத் தையை அடைந்ததும் ரோட்டைக் கடந்து பூங்கா பக்கத்திற்குச் சென்றார்.

"அவ்வேளையில் கார் நிறுத்தப் பட்டிருந்தது. நான் காருக்கு அண் மையில் செல்லவில்லை. காருக்கு அண்மையிலிருந்து அடுக்கு மாடி வீட்டின் முன் ஒரு பெண் நின்று சப்தம் செய்தார். அப்போது அப் பெண்ணருகே ஒரு ஆண் நிலத்தில் கிடப்பதைக் கண்டேன். நான் அப்பெண்ணுடன் கதைக்கவில்லை.

"நான் திரும்பி பஸ் தரிப்பு நிலையத்தை நோக்கி நடந்தேன். அப்போது எனது பின்னல் வாக னச் சப்தம் ஒன்று கேட்டது. திரும்பிப் பார்த்த போது ஜீப் பொன்று என் அருகே நிறுத்தப் பட்டிருந்தது. அந்த ஜீப்பிலிருந்து ராணுவ அதிகாரி ஒருவர் இறங்கி ஞர். நான் அவரிடம் நடந்த வற்றை விபரித்தேன்.

"சம்பந்தப்பட்ட கார் லைற் எதுவும் இன்றியே ஓடி வந்தது".

வழக்கறிஞர்: சம்பவ தினத் தன்று இரவு என்ன நடந்தது என் பவற்றைத் தெளிவாக கூறும்படி உம்மை நான் பல முறைகேட்ட போது ஏன் நீ காரின் லைற்றைப் பற்றி எதுவும் கூறவில்லை?

"நீங்கள் எதையும் குறிப்பிட்டுக் கேட்கவில்லை, அதனுல் நான் கூற வில்லை".

"சம்பவம் நடைபெற்ற இரு தினங்களுக்குப் பின்னர் நான் டாக்டர்பந்துலபெரேராவின் வீட் டிற்கு சென்றிருந்தேன். அங்கு ஒரு வர் சமூக சேவையாளரான டாக் டரை யாரோ அநியாயமாகக் கொலை செய்து விட்டதாக என்னி டம் தெரிவித்தார். அதைக் கேட்ட பின்னரே நான் எனக்குத் தெரிந்தவற்றை பொலீசாருக்குத் தெரிவிக்க முன்வந்தேன்."

இதைத் தொடர்ந்து இலங்கை ராணுவ காப்டன் திரு. சின்னும், புறக்கோட்டை பொலீஸ் நிலையத் தைச் சேர்ந்த பொலீஸ் சார் ஜன்ட் ருக்குபண்டா செனிவ ரெட்ண ஆகியோர் சாட்சியமளித் தனர்.

அடுத்து பொலீஸ் துப்பறியும் பிரிவைச் சேர்ந்த கைவிரலடை யாள பதிவாளர் சாட்சியமளித் தார். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (ஐ)

## கொலை முயற்சிக்கு மூன்று வருடம்

வட பகுதி அஸைஸ் நீதி மன்றத் தில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட கொலை முயற்சி வழக்கொன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரி யான மானிப்பாயைச் சேர்ந்த சின்னப்போடி வேலுப்பிள்ளைக்கு மூன்று வருடக் கடுங்காவல் தண் டனை விதிக்கப்பட்டது.

நீதியரசர் திரு. ஏ. எல். எஸ். சிறிமான இந்தத் தண்டனையை வழங்கினர்.

சண்டியன் இளையதம்பி என் பவரை 1968 ஏப்ரல் 7-ந் தேதி கொலை செய்ய முயன்றதாக எதிரி மீது குற்றஞ்சாட்டப்பட்டு இருந் தது. (ஐ)

## கென்யாவில் இலங்கை தூதர்

கென்யாவில் இலங்கை ஹைகமி ஷனராக திரு. ஐ. டி. பொன் சேகாவை நியமிப்பதென அர சாங்கம் முடிவு செய்துள்ளது.

45 வயதான திரு. பொன் சேகா வாஷிங்டன், ரங்கூன், பொன், பீகிங், கெய்ரோ, புது டில்லி ஆகிய இடங்களில் ராஜ தந்திரியாகக் கடமையாற்றி இருக்கிறார். (க)

## ஊரடங்குச் சட்டம் ரத்து

கோலாலம்பூர், செப். 3

ஒருவருடத்துக்கு முன்னல் பிறப்பிக்கப்பட்ட ஊரடங் குச் சட்டத்தை அதிகாரிகள் இன்று ரத்துச் செய்தனர்.

கோலாலம்பூரின் வடபகுதி யில் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணி பறிமுதல் செய்யப்படுவதை தடுக்கவே இந்த ஊரடங்குச் சட் டம் பிறப்பிக்கப்பட்டது. (ர)

## இலங்கையில் ஒற்றையாட்சி: வழிமுறைக்குழு தீர்மானம்

இலங்கையை சுதந்திர சோஷ லிஸ ஜனநாயகக் குடியரசு நாடாக்குவதற்கான புதிய அரச மைப்புச் சட்ட உருவாக்க விஷ யங்களை கவனிப்பதற்கான வழி முறைக் குழு தயாரித்து உள்ள 20 தீர்மானங்களின் படி இலங்கை யில் ஒற்றை ஆட்சியே இருக்கும்.

அரசமைப்பு விவகார அமைச் சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா தலைமையிலான வழி முறைக்குழுவின் இந்த இருபது அடிப்படைத் தீர்மானங்களின் படியே புதிய அரசமைப்புச் சட் டம் உருவாக்கப்படும்.

வழிமுறைக் குழு உருவாக்கி யுள்ள அடிப்படைத் தீர்மானங்க ளில் சில வருமாறு:—

ஸ்ரீலங்கா குடியரசு ஒரு ஒற்றையாட்சி நாடாக விளங் கும்.

ஸ்ரீலங்கா மக்களின் இறமை பிரிக்க முடியாதது. அது அவ்வப் போது தொகுதி ரீதியில் நேரடி யாக, சுயேச்சையாக, இரகசிய மாக சர்வஜன வாக்குரிமை மூலம் தெரிவு செய்யப்படும் பிரதி கள் அடங்கிய தேசிய சபை (நாஷ னல் அசெம்பிளி) மூலம் பிரயோ கிக்கப்படும். பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட எல்லாப் பிரசைகளும், சட்ட ரீதியாக தகைமையற்றவ ராக்கப்பட்டவர்களைத் தவிர, வாக்களிக்கும் தகுதி பெறுகின்றனர்.

எந்த தேசிய சபையும் அதன் முதற் கூட்டத்தில் இருந்து ஆறு வருடங்களுக்கு மேல் இயங் காது. முதல் தேசிய சபை அரசி யல் நிர்ணய சபை உறுப்பினர்க ளைக் கொண்டதாக, புதிய அரசி யல் சட்டம் ஏற்கப்பட்ட ஆறு வருட காலத்தில் இயங்கும்.

சட்ட சபை ஒன்றுகவே இருக் கும்.

நாட்டின் அதி அதிகாரம் பொருந்திய பெரிய அமைப்பாக தேசிய சபை அமையும்.

நாட்டின் தலைவராக ஜனதிபதி இருப்பார். இவர் பிரதமரால் நியமிக்கப்படுவார். பதவி காலம் நிர்ணயிக்கப்பட வேண்டும். அவர் பிரதமரின் ஆலோசனைக ளுக்கு ஏற்பவே இயங்குவார்.

ஜனதிபதியின் கருத்தில் தேசிய சபையின் நம்பிக்கையைப் பெற்ற தேசிய சபை உறுப்பினர் ஒருவரை அவர் பிரதமராக நியமிக்கலாம்.

தேசிய சபையின் உறுப்பினர்க ளாக உள்ளவர்களிலேயே ஜனதி பதி மந்திரிகளை தெரிவு செய்வார். பிரதமர் தலைமை வகிக்கும் இந்த மந்திரி சபை தேசிய சபைக்கு கூட் டுப் பொறுப்புடையதாக இருக் கும்.

அரசாங்கம் தோற்கடிக்கப் பட்டால் பிரதமர் ராஜினமாச் செய்வார். (ஐ)

## புதிய தலைவர்

இலங்கை கனரகக் கூட்டுத் தாபன டைரக்டராக திரு. டபிள்யூ. எம். என். குமாரரட்ண நியமிக்கப்பட்டு உள்ளார்.

அத்தனகலைத் தேர்தல் தொகு தியைச் சேர்ந்த இவர் ஒரு காணிச் சொந்தக்காரர் ஆவார்.

நாளந்தா கல்லூரி முன்னள் மாணவரான திரு. குமாரரட்ண ஒரு பிரபல சமூகசேவகரும், ஸ்ரீ. ல. சு. க. முக்கிய ஆதரவாளரும் ஆவார். (ஐ)

## இரத்தினசாரிதேவி நடிகையாவார்

டோக்கியோ, செப். 3

முன்னள் இந்தோனேஷிய ஜனதிபதி சுகர்ணோவின் விதவையான இரத்தினசாரி தேவி தனக்கு ஹொங்கொங் ஷா பிரதர்ஸ் ஸ்டூடியோ ஒரு படத்தில் நடிக்கும் வாய்ப்பை அளித்துள்ளதாக வெளிவந்த செய்திகள் குறித்து ஏதும் கூறுவதற்கு இன்று மறுத் தார்.

பலகோடி டாலர்கள் செல வில் தயாரிக்கப்படும் ஒரு படத் தில் தேவியை நடிகையாக்கப் போவதாக ஹொங்கொங் ஸ்டூ டியோ தலைவர் ரன் ரன் ஷா கூறினர்.

இதுபற்றி கருத்துத் தெரிவிப்ப தற்கு தேவி மறுத்தார். (ஐ)


## பாரிசவாதம் அல்லது போலியோ

போன்ற கொடிய வியாதிகளையிட்டும் அநேக காலமாக பலவித மான மருந்துகளை செய்தும் குணப்படாது மனம் வேதனை அடைந்து எவ்வளவு காலம் சென்ற கொடிய வாத நோய்களானுலும் சரியே. எங்கள் இராஜ வைத்திய அனுபவங்களின் மூலம் ஒரு லட்சத் துக்கு மேற் கொண்ட வியாதியஸ்தர்களை குணப்படுத்தி கைகண்ட

### பாரிசவாத தைலம்

கீழ்க் குறிப்பிட்ட வியாதியஸ்தர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் — தங்களின் வியாதிகளுக்கு இன்றே உப யோகித்து பூரண சித்தியடையுங்கள். திரும் வியாதிகள் சகல வகைப்பட்ட பாரிச வாதம், இளம்பிள்ளை வாதம், முடக்கு வாதம், நடுக்கு வாதம், பச்சை வாதம், பக்க வாதம், அண்ட வாதம், இடுப்பு வாதம், குடல் வாதம், நெஞ்சு அல்லது மார டைப்பு, மொளிகளில் வீக்கம், கற்றழும்பு, குதிக்கால் நரம்புகள் வலி, வீக்கம், உடம்பில் பற்பல ஊரல்கள், சொறி, சிரங்கு, அல் லது கட்டிகள், குடிவேகம், புழு மேய்ச்சல், உடம்பில் கரும் புள்ளி கள், வெள்ளை படருதல், சிறுவர்களுக்கு கைகால் உறுப்புகள் பல ஹீனம், முடக்கும், சோர்வு, கழுத்து, முதுகந்தண்டு, இடுப்பு பல ஹீனம், தசை கரைந்து, கணுக்குக் கணு வீக்கம், முடக்கம் போன்ற போலியோ நோய்களையும் மேற்படி மேலே குறிக்கப் பட்ட எவ்வித கடினமான நோய்களையும் ஏழு தினம் சிகிச்சையின் பின் குணம் காண்பீர்கள்:— சகல விபரங்களையும் மருந்துடன் அனுப்பி வைப்போம். நேரிலும் அல்லது வி. பி. பி. தபாலிலும் பெற்றுக் கொள்ளலாம்.

12 அவுன்ஸ் போத்தல் ஒன்றுக்கு ரூ. 100/-, 6 அவுன்ஸ் ரூ. 50/-
2 அவுன்ஸ் ரூ. 20/-, தபால் செலவு சதம் -/90.

### இழந்த சக்தியை மீண்டும் பெறுவதற்கு ரிஷி மன்மதன ஹல்வா

இன்றே சாப்பிடத் தவறுதீர்கள்

தெரிந்தும் தெரியாமலும் துர்ப்பழக்க வழக்கங்களில் ஈடு பட்டு தனது சக்தியை இழந்து அவதிப்படுவோர்களுக்கும் கொடிய கனவுகளால் தனது சக்தியை இழந்து இத்தன்மையான வகையில் நீர் வியாதிகள் ஏற்பட்டு நீர், சீனி போகுதல், மாவு, வெண்ணெய் போன்ற வகையில் வெளி யாகி இளைப்பு, இருமல், சோகை, மூட்டு வலிகள், அல்லது வீக்கம் ஏற்பட்டு நரம்புத் தளர்ச்சியுண்டாகிய ஆண் - பெண் இரு சாரார் களுக்கும் இல்லற வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு உலகத்தில் ஜீவியம் செய்யவே விருப்பமில்லாமல் மனவேதனைப்படும் அன்பர் களுக்கு இதோ உங்களுக்குப் புத்துயிர் தந்து இன்புற்று வாழ எங்களின் ரிஷி மன்மதன ஹல்வாவை சாப்பிடுவீர்களானுல் ஆச்ச ரியப்படக்கூடிய வகையில் உங்கள் வாழ்க்கையை பிரதிபலிக்கச் செய்யும் ஓர் அற்புத சஞ்சீவி இந்த ரிஷி மன்மதன ஹல்வா.

30 நாள் மருந்து ரூ. 40/-, 15 நாள் மருந்து ரூ. 20/-
தபால் செலவு -/70 சதம்.

வி. பி. பி. தபாலில் பெற்றுக் கொள்ளலாம்.

கடந்த 787 ஆண்டுகளாக கண்டி பூர்வீக மன்னர்களுக்கும், பல லட்சக்கணக்கான வியாதியஸ்தர்களுக்கும் பரம்பரை, பரம் பரையாகச் சிகிச்சை செய்து அளவற்ற பல நற்சாட்சிப் பத்திரங் கள் பெற்றுவரும் இராஜ வைத்தியர் வைத்தியரெத்தின முதலியார் அவர்கள் வகை.

**ஏ. எல். எம். ஜே. டி. உடையார்,**
வாத ரோக நிபுணர், இராஜ வைத்தியர்,
மடவலை பஜார், கண்டி.


இப் பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5 குணசேன மாவத்தை, கொழும்பு - 12. (இலங்கை). வெளியீட்ட தேதி 4 செப்டம்பர் 1970.
Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12, (Ceylon).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org